# 21. நபிமார்கள் இருவர்

## மூஸா (நபி)

01. மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிறந்த ஆண்டு எது? எங்கே பிறந்தார்?

- கி.மு 1250
- எகிப்தில்

02. மூஸா (அலை) அவர்களின் காலத்தில் வாழ்ந்த பிர்அவ்னின் பெயர் என்ன?

- 2ம் ராம்ஸீஸ்

03. மூஸா (அலை) அவர்கள் யாருடைய மகளை திருமணம் செய்தார்கள்?

- ஷுஐப் (அலை) அவர்களின் மகளை

04. முஃஜிஸா என்பதன் பொருள்?

- அற்புதம்

05. மூஸா (அலை) அவருக்கு வழங்கப்பட்ட அற்புதம் என்ன?

- கைத்தடி பாம்பாக மாறுதல்.
- கைகள் பிரகாசித்தல்

06. மூஸா (அலை) அவர்கள் எங்கு மரணித்தார்கள்?

- பலஸ்தீனில்

## ஈஸா (நபி)

07. மர்யம் (அலை) அவர்களின் தந்தையின் பெயர்?

- இம்ரான்

08. மர்யம் (அலை) அவர்கள் சிறுவயதாக இருந்த போது வளர்த்தெடுப்பதற்கு பொறுப்பேற்ற நபி

- ஸகரிய்யா (அலை)

09. ஈஸா (அலை) அவர்கள் எங்கு பிறந்தார்கள்?

- பலஸ்தீனில்

10. ஈஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள்?

- மரணித்தவர்களை உயிர்ப்பித்தல்.
- பிறவிக் குருடரையும் வெண்குஷ்டரோகிகளையும் குணப்படுத்தல்.
- வீட்டில் மறைவாக வைக்கப்பட்டுள்ள பொருட்களை சரியாக சொல்லல்.

11. "ஹவாரிய்யூன்கள்" எனப்படுபவர்கள் யார்?

- ஈஸா (அலை) அவர்களின் அழைப்பை ஏற்ற சீடர்கள்.

12. ஈஸா (அலை) அவர்களை கொலை செய்வதற்கு முயன்ற மன்னர்கள்?

- பலஸ்தீனத்தை ஆட்சி செய்த ஏரோத் மன்னன்.
- ரோமானிய சிற்றரசன்.

# 22. உம்மஹாதுல் முஃமினீன்

01. உம்மஹாதுல் முஃமினீன் (விசுவாசிகளின் அன்னையர்) எனப்படுபவர் யார்?

நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்கள்.

## 1. ஸைனப் பின்த் ஹுஸைமா(ரழி)

- இவர் அப்துல்லாஹ் இப்னு ஜஹ்ஸ் என்பவரின் மனைவியாவார்.
- அன்னை மைமூனா ரழி அவர்களின் தாய்வழி சகோதரியும் ஆவார்.
- நபி (ஸல்) அவர்களை ஹிஜ்ரி 3 இல் திருமணம் முடித்தார்கள்.
- 400 திர்ஹம்கள் மஹராக வழங்கப்பட்டது.
- அப்துல்லாஹ் இப்னு ஜஹஸ் (ரழி) அவர்கள் உஹத் போரில் ஷஹிதாக்கப்பட்டார்கள்.
- இவரது சிறப்புப் பெயர் உம்முல் மஸாகீன் (ஏழைகளின் அன்னை)

## 2. ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி)

- இவர் நபி (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரியான உமைமா பின்த் அப்துல் முத்தலிப் அம்மையாரின் மகளாவார்.
- நபி (ஸல்) அவர்கள் தனது வளர்ப்பு மகனாகிய ஸைத் (ரழி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள்.

- சில காலம் சென்றதும் ஸைத் (ரழி) விவாகரத்து செய்து விட்டார்கள்.
- அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 5இல் திருமணம் முடித்தார்கள்.
- மார்க்க விடயங்களில் சிறந்தவராகவும், இறையச்சம் உடையவராகவும், உண்மை பேசுபவராகவும், குடும்ப உறவைப் பேணுபவராகவும், அதிகம் தர்மம் செய்பவராகவும், உலக பற்றற்றவராகவும், ஏழைகளை நேசிப்பவராகவும் காணப்பட்டார்கள்.
- நீண்ட கையை உடையவர் என்ற சிறப்புப் பெயரை உடையவர்.
- நீண்ட கை என்பது அதிக தர்மம் செய்வது என்று பொருள்படும்.
- ஹிஜ்ரி 20ஆம் ஆண்டு 53 ஆவது வயதில் வபாத்தானார்கள்.
- ஜன்னதுல் பகியில் அடக்கம் செய்யப்பட்டது.

## 3. அன்னை மய்மூனா (ரழி)

- இவர் உம்முல் பழ்ல (ரழி) அவர்களின் சகோதரி ஆவார்.
- இவரது முதல் கணவர் மஸ்உத் என்பவர் இவரை விட்டு பிரிந்தார்.
- பின் அபூ ருஹ்ம் என்பவரை மணம் முடித்து அவரும் மரணித்தார்.
- பின்னர் விதவையாக வாழ்ந்த இவர் நபி (ஸல்) அவர்களை திருமணம் முடித்தார்.
- இவர் ஏறத்தாழ 76 ஹதீஸ்களை ரிவாயத் செய்தார்.
- இவர் ஸஹாபாக்களுக்கும், தாபியீன்களுக்கும் கற்றுக் கொடுத்தார்.
- அதிக ஞானம் உடையவராகவும், இறையச்சம் உடையவராகவும், குடும்ப உறவை பேணுபவராகவும் காணப்பட்டார்கள்.
- ஹிஜ்ரி 51 இல் 80 ஆவது வயதில் வபாத்தானார்கள்.

## 4. உம்மு ஹபீபா (ரழி)

- இவரது இயற் பெயர் ரம்லா.
- அபூ ஸுப்யான் என்பவரின் மகளாவார்.
- ரம்லா இஸ்லாத்தை ஏற்று இருவருமாக அபீ ஸினியாவிற்கு ஹிஜ்ரத் சென்றார்கள் அங்கு கணவர் மதம் மாறி விட்டார்.

- இவருக்கு ஹபீபா என்றொரு குழந்தையும் உண்டு.
- நபி (ஸல்) அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க நஜ்ஜாசி மன்னன் உம்மு ஹபீபா (ரழி) அவர்களை திருமணம் முடித்துக் கொடுத்தார்கள்.
- நஜ்ஜாசி மன்னன் நபி (ஸல்) அவர்களின் சார்பில் 400 தீனார்களை உம்மு ஹபீபாவிற்கு மஹராக கொடுத்தார்கள்.
- இது உம்மு ஹபீபா (ரழி) அவர்களின் 36 வது வயதில் ஹிஜ்ரி 7ல் நிகழ்ந்தது.
- உம்மு ஹபீபா (ரழி) தனது 72 ஆவது வயதில் மரணம் நெருங்கிய போது ஆயிஷா (ரழி), உம்மு ஸல்மா (ரழி) ஆகியோரிடம் சில விடயங்களை கோரி மன்னிப்புக் கோரினார்கள்.
- ஆயிஷா (ரழி) அவர்கள் என்னை சந்தோஷப்படுத்தினீர்கள் என கூறினார்கள்.

# 23. இரு முஸ்லிம் வீரர்கள்

## வெற்றி வீரர் ஸலாஹுத்தீன் ஐய்யூபி

01. ஸலாஹுத்தின் ஐய்யூபி பிறந்த ஆண்டு எது?

- கி.பி 532

02. பிறந்த இடம் யாது?

- ஈராக்கிலுள்ள திக்ரித்

03. இனம் யாது?

- குர்திஷ்

04. விஷேட திறமைகள்?

- இராணுவ துறையில் சிறப்புத் தேர்ச்சி.

05. பைதுல் முகத்தஸ் கைப்பற்றப்பட்ட ஆண்டு?

- கி.பி 1187 ஹிஜ்ரி 583 இல் ஹித்தீன் எனுமிடத்தில் போரிடப்பட் சில மாதங்களில் பைதுல் முகத்தஸ் கைப்பற்றப்பட்டது.

06. சுல்தான் ஸலாஹுத்தீனின் மனித நேய பண்புகள் யாவை?

- எதிரிப்படை தளபதி நோய்வாய்பட்ட போது தனது வைத்தியரை அனுப்பி சிகிச்சை செய்தார்.
- உயர்தரமான குதிரையை அன்பளிப்பு செய்தார்.

07. சுல்தான் ஸலாஹுத்தீன் எப்போது வபாத்தானார்?

- கி.பி 1193 ஹிஜ்ரி 589 ஸபர் மாதம்.

## ஸுல்தான் முஹம்மத் அல் பாதிஹ்

08. பிறந்த ஆண்டு எது?

- கி.பி 1432 மார்ச் 30

09. தந்தையின் பெயர் யாது?

- முராத்

10. சிறப்புப் பெயர் யாது?

- அல் பாதிஹ் (வெற்றியாளர்)

11. இவர் கற்றுக் கொண்ட மொழிகள் யாவை?

- அரபு, பாரசீகம், துருக்கி, இலத்தீன், கிரோக்கம்.

12. இவர் எப்பகுதிக்கு ஆளுனராக நியமிக்கப்பட்டார்?

- மக்னீதிய்யா என்ற பகுதிக்கு.

13. அல்கர்னுஸ் ஸஹபி என்பது யாது?

- பெரியதொரு நீர்ப்பரப்பு.

14. கொன்ஸ்தாந்து நோபிலின் புதிய பெயர் என்ன?

- ஸ்தான்புல்

15. முஹம்மத் அல் பாதிஹ் மரணித்த ஆண்டு?

- கி.பி 1481 ஹிஜ்ரி 886

# 24.சிக்கனமும் சேமிப்பும்

01. சிக்கனமாக வாழ்தல் என்றால் என்ன?

- இருப்பதைக் கொண்டு தேவையை கட்சிதமாய் நிறைவேற்றல் ஆகும்.

02. சேமிப்பு என்றால் என்ன?

- வீண் விரயம் செய்யாமல் சிக்கனமாக பயன்படுத்திய பின் மீதமானவற்றை பாதுகாப்பதே சேமிப்பு ஆகும்.

03. நடைமுறை வாழ்வில் வீண் விரயம் செய்யப்படும் வளங்கள் யாவை?

- நீர், மின்சாரம், பணம், பொதுச் சொத்துக்கள்.

04. சிக்கனம், சேமிப்பு மூலம் கிடைக்கும் நன்மைகள் யாவை?

- கடன் பிரச்சினை நீங்கும்.
- பொருளாதார நெருக்கடிகள் நீங்கும்.
- மற்றவரிடம் தங்கி வாழ்வதை தடுக்கலாம்.

# 25.ஹலால் ஹராம்

01. ஹலால் என்றால் என்ன?

- மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட விடயங்கள் ஹலால் ஆகும்.

02. ஹராம் என்றால் என்ன?

- மார்க்கத்தில் தடுக்கப்பட்ட விடயங்கள் ஹராம் ஆகும்.

03. அல்லாஹ் ஹராமாக்கப்பட்ட உணவுவிற்கு 2 உதாரணம் தருக?

- உடலுக்கும், உயிருக்கு ஆபத்தை தரக் கூடியவை.
- தங்கம்,வெள்ளி பாத்திரங்களில் உண்ணல் பருகல்.

04. உடையுடன் தொடர்புடைய ஹராமான விடயத்திற்கு 2 உதாரணம் தருக.

- ஆண்கள் பட்டாடை தங்க ஆபரணங்கள் அணிதல்.
- ஆண்கள் பெண் வேடத்திலும் பெண்கள் ஆண் வேடத்திலும் உடை அணிதல்.

05. நடத்தையுடன் தொடர்பான ஹராமானவற்றிற்கு 2 உதாரணம் தருக?

- தீய வார்த்தை பேசுதல்.
- பொய் சாட்சி கூறுதல்.

# 26.இன நல்லுறவு

01. சமூகங்களுக்கிடையில் நீதமாக நடப்பதற்குரிய அல்குர்ஆன் வசனம்?
“ஈமான் கொண்டவர்களே நீங்கள் நீதம் செலுத்தி அல்லாஹ்வுக்கு சாட்சியாளர்களாக இருங்கள். நீங்கள் செலுத்தும் நீதி உங்களுக்கோ, உங்கள் பெற்றோருக்கோ, நெருங்கிய உறவினருக்கோ எதிராக இருந்தாலும் சரியே.” (4;35)

02. மதீனா சாசனம் எப்போது நடைபெற்றது?

- கி.பி 622 இல்

03. மதீனா சாசனம் யார் யாருக்கு இடையில் நடை பெற்றது?

- நபி (ஸல்) அவர்களுக்கும் யூதர்களுக்கும் இடயில்.

04. சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வழிகள் யாவை?

- அனைத்து மக்களும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததியினர்
- இக்கட்டான சந்தர்ப்பங்களின் போது உதவி ஒத்தாசை வழங்கள்.
- பிரதேச தேசிய நலன் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கேற்றல்.

# 27.பிற சமயங்களை மதித்தல்

01. மனிதர்கள் யாவரும் சகோதரர்கள் என்பதை வலியுறுத்தும் ஹதீஸ் ஒன்று?

“மண்ணில் உள்ள மனிதர்களை நீங்கள் நேசித்தல் விண்ணில் உள்ள இறைவன் உங்களை நேசிப்பான்.”

02. பிற சமயங்களை மதித்தல் தொடர்பாக அல்குர்ஆன் வசனம்? “ஈமான் கொண்டவர்களே நீங்கள் நீதி செலுத்தி அல்லாஹ்விற்கு சாட்சியாளர்களாக இருங்கள். நீங்கள் செலுத்தும் நீதி உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ, நெருங்கிய உறவினருக்கோ, எதிரானதாக இருந்தாலும் சரியே.”

# 28.இலங்கையில் உள்ள ஏனைய சமயங்கள்

01. இலங்கை மக்கள் பின்பற்றும் சமயங்கள் 4 தருக?

- பௌத்தம்
- இந்து
- இஸ்லாம்
- கிறிஸ்தவம்

02. மகாமாயா தேவிக்கு பிறந்த குழந்தைக்கு இடப்பட்ட பெயர் என்ன?

- சித்தார்த்தன்

03. புத்தர் பிறந்ததும், ஞானம் பெற்றதும், உயிர் நீத்தலும் எத்தினத்தில் இடம் பெற்றது?

- வெசாக் தினம்

04. புத்த பிராணின் வாழ்வில் கடை பிடித்த முக்கிய அம்சங்கள் யாவை?

- அகிம்சை
- அன்பு
- கருணை
- பிறருக்கு தொண்டு செய்தல்.
- அவர்களின் நல் வாழ்வினை கருதுதல்.
- நோயாளரை பேணல்.

05. இலங்கையின் இந்து சமயத்திற்குரிய சரியான பெயர் என்ன?

- சனாதனதர்மம்

06. இந்து சமயத்தின் வேத நூல்கள் யாவை?

- இருக்கு
- யசுர்
- சாமம்
- அதர்வம்

07. சைவர்களின் முழு முதற் கடவுள் யார்?

- சிவன்

08. வைணவர்களின் முழு முதற் கடவுள் யார்?

- விஷ்ணு

09. கிறிஸ்தவர்கள் என்பவர் யார்?

- இயேசு கிறுஸ்துவை பின்பற்றவோர் கிறிஸ்தவர்கள்.

10. இயேசு பிரான் எங்கு பிறந்தார்?

- பெத்லேகம் எனும் சிற்றூரில் மாட்டுத் தொழுவத்தில் யூத குலத்தில் பிறந்தார்.

11. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் யாது?

- கொல்கத்தா எனும் குன்று.

12. பெரிய வெள்ளி கிறிஸ்தவர்கள் மூலம் எவ்வகையில் முக்கியத்துவம் பெறுகிறது?

- இயேசு வெள்ளிக்கிழமை அன்று உயிர் விட்டபடியால் கிறிஸ்தவர்கள் ஆண்டு தோறும் வெள்ளியன்று வழிபடுகின்றனர்.

13. கிறிஸ்தவர்கள் கொண்டாடும் பெருநாள்?

- நத்தார்

14. இயேசு நாதரின் தாயார் பெயர்?

- மரியாள்

# 29.தேசத்தின் மீது பற்று கொள்ளல்

01. நபி (ஸல்) அவர்களின் நாட்டுப் பற்றை வலியுறுத்தும் சம்பவம்?

- நபியவர்கள் மக்காவை விட்டு புறப்படும் போது இவ்வாறு கூறினார்கள். “மக்காவே இந்த உலகத்திலேயே எனக்கு விருப்பமான பூமி அல்லாஹ்விடத்தில் மிகவும் கண்ணியமான இடம். உன் சமூகம் உன்னை விரட்டி அடிக்காவிட்டால் உன்னை விட்டு சென்றிருக்க மாட்டேன்.”

02. நாட்டுப்பற்று என்றால் என்ன?

- நாட்டுப்பற்று என்பது ஒரு மனிதன் தான் பிறந்த பூமியை நேசிப்பதும் நாட்டு மக்களை நேசிப்பதும். நாட்டு மக்களோடு இணக்கமாக வாழ்வதும் அவர்களுக்காக உழைப்பதும் உண்மையான தேசப்பற்றாகும்.